செ.வெ.எண்: 331 நாள்: 03.06.2025

# புதுக்கோட்டை மாவட்டம்

## பத்திரிகைச் செய்தி

---

திருச்சி சேதுராப்பட்டியில் உள்ள ஸ்ரீரங்கம், அரசினர் பாலிடெக்னிக் கல்லூரியில் 2025-2026 ஆம் கல்வியாண்டில் டிப்ளமோ முதலாமாண்டு மற்றும் நேரடி இரண்டாம் ஆண்டு ஆகியவற்றில் சேர நேரடி மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. கல்லூரியில் சேர விரும்பும் மாணவர்கள் நேரில் வந்து ரூ.150/—ஐ செலுத்தி விண்ணப்பித்து உடனடியாக சேர்க்கை பெற்றுக்கொள்ளலாம். அல்லது https://www.tnpoly.in என்ற இணையதளம் வாயிலாகவும் விண்ணப்பிக்கலாம். SC/ ST மாணவர்களுக்கு விண்ணப்ப கட்டணம் இல்லை. இப்பாலிடெக்னிக் கல்லூரியில் அமைப்பியல் (DCE-சிவில்), இயந்திரவியல், (DME-மெக்கானிக்கல்), மின்னியல் மற்றும் மின்னணுவியல் (DEEE-எலக்ட்ரிக்கல் மற்றும் எலக்ட்ரானிக்ஸ்), மின்னணுவியல் மற்றும் தொடர்பியல் (DECE-எலக்ட்ரானிக்ஸ் மற்றும் கம்யூனிக்கேபின்), மற்றும் கணிப்பொறியியல் (DCSE-கம்ப்யூட்டர்), சைபர் அமைப்பு மற்றும் தகவல் பாதுகாப்பு பொறியியல் (DCSIS) ஆகிய பாடப்பிரிவுகளுக்கு நேரடி மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது. ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,242/- மட்டுமே கட்டணமாக செலுத்த வேண்டும். முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு விண்ணப்பிப்போர் 10ம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். நேரடி இரண்டாமாண்டு மாணவர் சேர்க்கைக்கு ஐடிஐ (ITI) அல்லது 12ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் முதலாமாண்டு மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக 94436 73710, 80720 02452, 94424 31190, 90424 18693, 97873 30393, 90036 66061, 95974 76719, 82482 52577 தொலைபேசி எண்களையும், நேரடி இரண்டாமாண்டு மாணவர்கள் சேர்க்கை தொடர்பாக 98420 04853, 96268 85482, 96776 42215, 73739 05151, 98423 16326, 76049 33100 ஆகிய எண்களையும் தொடர்பு கொண்டு கூடுதல் விவரங்களை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**சிறப்பம்சம்**, பத்தாம் வகுப்பு முடித்த மாணவர்கள், மூன்று ஆண்டுகள் படிப்பை முடித்தவுடன் வேலை வாய்ப்பு, அனைத்து வசதிகளுடன் கூடிய ஆய்வகங்கள், ஸ்மார்ட்கிளாஸ் ரூம், மாணவ மாணவியருக்கு விடுதி வசதி, இலவச பேருந்து பயண அட்டை, இரயில் கட்டண சலுகை, முதலாமாண்டு மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகம், 6 முதல் 10 அல்லது 12 வகுப்பு வரை அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளியில் பயின்ற மாணவிகளுக்கு மாதம் ரூ.1000/- கல்வி உதவித்தொகை, தமிழ்புதல்வன் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூ.1000/- கல்வி உதவித்தொகை, நான் முதல்வன் திட்டத்தின் மூலம் மாணவ, மாணவியர்களுக்கு வேலை வாய்ப்பை உயர்த்திட திறன் மேம்பாட்டு பயிற்சி, அரசின் உதவித்தொகையுடன் தொழிற்சாலைகளில் பயிற்சி, தொழிற்முனைவோர் மேம்பாட்டிற்காக ED பிரிவின் மூலம் சிறப்பு பயிற்சி, மதிப்பெண் அடிப்படையில் மாணவியர்களுக்கு (Pragati) உதவித்தொகை வருடம் ரூ.50,000, மாற்றுத்திறனாளி மாணவ/ மாணவியர்களுக்கு (Saksham) உதவித்தொகை வருடம் ரூ.50,000, பெற்றோரை இழந்த மாணவ/ மாணவியர்களுக்கு (Swanath) உதவித்தொகை வருடம் ரூ.50,000, மாணவ மாணவியர்களுக்கு Chess Club, Cultural Club, Python (App Designing) Club, Literacy Club, போன்ற பல்திறன் மேம்படுத்தும் பயிற்சிகள், 2024 - 2025ல் மூன்றாம் ஆண்டு முடித்த அனைத்து மாணவர்களும், வளாக நேர்காணல் மூலம் 100 சதவிகிதம் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர்.

மேற்கண்ட தகவலை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**

புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai